தொடர்புள்ளதாக இருக்கவேண்டும். இப்படி இருக்குமேயானால்தான் அது குறித்து ஆராயப்படும் என்று கூறியுள்ளார்கள். அப்பகுதி துணைத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்படும் என்று அறிவுரை கூறியுள்ளார்கள். ஆனால் தாளவாடிப் பகுதி இந்த இரு விதிமுறைகளுக்குட்படவில்லை என்பதனால் பரிந்துரை செய்ய இயலாது என்று அறிக்கை தந்துள்ளார்கள் என்பதனை--ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் அறிக்கை தந்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி *அ.தி. சரஸ்வதி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் 10 ஆயிரத்திற்கு.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு துணைக் கேள்விகள் முடிந்து விட்டன. மூன்றாவது துணைக் கேள்வி இல்லை. கேள்வி கேட்க எல்லோரும் கைக் தூக்குகிறார்கள்.

அடுத்து வினா எண் 387, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

387—

கபிலர்மலை தொகுதியில் கோழிக் குஞ்சு பொரிப்பகம் நிறுவுதல்

44817*—திருமதி ப. சரஸ்வதி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோழிக் குஞ்சு பொரிப்பகம் சேலம் மாவட்டம், நாமக்கல் அருகில் கபிலர்மலை தொகுதியில் நிறுவ அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கபிலர்மலை தொகுதியில் கோழிக்குஞ்சு பொரிப்பகம் நிறுவ உத்தேசம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

1995 ஏப்ரல் 21]

முற்பகல் *10–25*

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே கோழி வளர்ப்பதில் முதலிடம் வகிப்பது, நாமக்கல் வட்டமும், அதிலிருந்து பிரிக்கப்பட்ட பரமத்திவேலூர் வட்டமும் தான். டாப்கோ அலுவலகத்தில் கோழிக் குஞ்சுக்காக பணத்தைக் கட்டினால் மதுரை மாவட்டம் கப்பலூருக்கும், திருச்சி மாவட்டம் அரசலூருக்கும் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், கோழிக்குஞ்சு டெலிவரியை அந்தந்த அலுவலகத்திலேயே கொடுத்துவிட வேண்டிய சூழ்நிலை இருந்தாலும், கோழிக்குஞ்சுக்கு டிமாண்ட் வருகின்ற சமயத்தில் பணக்கார விவசாயிகள் நேரடியாக வாகனத்தை எடுத்துச்சென்று அந்தந்த ஹேச்சரிசிலேயே டெலிவரியைப் பெற்றுக்கொள்கின்றார்கள். ஆனால், ஏழை விவசாயிகள் டாப்கோ அலுவலகத்தில் பணத்தைக் கட்டிவிட்டு நீண்ட நாட்கள் காத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட அவல நிலை ஏழை விவசாயிகளுக்கு இருக்கின்ற காரணத்தாலும், தமிழகத்திலேயே அதிகப்படியான கோழிக்குஞ்சு வளர்க்கின்ற கோழிப் பண்ணையாளர்கள், விவசாயிகள் எங்கள் பகுதியில் இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலனை செய்து, வருகின்ற நிதியாண்டில் இந்த நாமக்கல் தாலுகாவிற்கு பக்கத்தில் இருக்கக்கூடிய பரமத்திவேலூர் வட்டத்தில், வள்ளியப்பம்பட்டி, ராசாம்பாளையம் போன்ற பகுதிகளில் ஏராளமான புறம்போக்கு நிலம் இருக்கின்றதால், தண்ணீர் வசதியும், காவிரி ஆறு 6, 7 கிலோமீட்டருக்கு அருகில் இருப்பதால் மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வசதிப் படைத்தவர்கள் வாகனங்களை எடுத்துச் சென்று பெறுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை சுமத்தியிருக்கிறார்கள். நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன். அத்தகைய குற்றச்சாட்டுகளை நேரடியாகக் குறிப்பிட்டு தெரிவிப்பார்களானால் அந்த அதிகாரிகள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும். எந்தெந்த ஏழை விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டுமென்று நீங்கள் விரும்புவீர்களோ, முறைப்படி, வரிசைப்படி கட்டாயம் அருகாமையிலுள்ள திருச்சியிலிருந்து அவர்கள் பெறுவதற்கான ஏற்பாடுகள் இந்த அரசின் வாயிலாக செய்யப்படும் என்பதை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், உறுப்பினர் ஊரில் இது வேண்டும், மறுபரிசீலனை செய்வீர்களா என்பதுதான் கேள்வியினுடைய நோக்கம்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது புதியதாக அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கும் இல்லைதானா? (சிரிப்பு)

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல்லில்தான் கால்நடை ஆராய்ச்சி மையம் இருக்கின்றது. நாமக்கல் தான் முட்டையினுடைய விலையை நிர்ணயிக்கக்கூடிய ஸ்தலமாக இருக்கின்றது. இப்படிப்பட்ட முக்கியப் பகுதியாக இருக்கக்கூடிய நாமக்கல்லில், நாமக்கல்லுக்கு அருகிலுள்ள 5, 6 கிலோமீட்டருக்கு அருகில்தான் நான் குறிப்பிடப்படக் கூடிய இந்த இடம் இருக்கிறது. இங்கே நாள் ஒன்றுக்கு 2 கோடி முட்டை உற்பத்தி செய்கின்றார்கள், ஒவ்வொரு நாளும். ஏழை விவசாயிகளுடைய தொழிலே கோழிப்பண்ணை தொழில்தான். திரும்புகின்ற இடம் எல்லாம் கோழிப்பண்ணையாக காட்சியளிக்கக்கூடிய இந்தப் பகுதியில் தாங்கள் இப்பொழுது கப்பலூரிலும், அரசலூரிலும் நிறுவி இருக்கின்ற அந்த ஹேச்சரீசானது எங்களுடைய பகுதியில் ஜெய்தேவி ஹேச்சரீஸ், சதர்ன் ஹேச்சரீஸ், வெங்கடேஸ்வரா ஹேச்சரீஸ் என்று தனியார் நிறுவனங்கள் போட்டிப் போட்டுக்கொண்டு விவசாயிகளுக்கு கடனில் கொடுக்க முன்வருகின்றார்கள். அவர்கள் கோழிக்குஞ்சுகளை கடனிலே கொடுக்கின்ற காரணத்தால் யாரும் டாப்கோவிலே கோழிக்குஞ்சு வாங்குவதற்கு முன்வருவதில்லை. காரணம், நம்முடைய அரசாங்கத்தின்மூலம் ஏழை விவசாயிகளுக்கு சலுகையிலே கோழிக் குஞ்சு கொடுக்க முன்வந்தாலும், உடனடியாக பணத்தைக் கட்டினால் தான் குஞ்சுகள் பெறுகின்றார்கள். ஆனால் தனியார் நிறுவனங்கள் ஒரு வருடம், 6 மாத காலத்தவணைக் கொடுத்து குஞ்சுகளை சப்ளை செய்வதால் டாப்கோ நிறுவனத்திலிருந்து கோழிக்குஞ்சுகளை பெறுவதற்கு முன்வருவதில்லை. கோழிக்குஞ்சுக்கு டிமான்ட் இருக்கின்ற சமயத்தில் மட்டும் தான் அவர்கள் டாப்கோ அலுவலகத்தை நாடுகின்றார்கள். அதற்காகத்தான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒவ்வொரு நாளும் புதுப்புதுத் திட்டங்களை இந்த தமிழகத்திற்கு தந்து, புதுமை கீதமாக,

1995 ஏப்ரல் 21]

ஏழைகளின் காவல் அரணாக இன்று தமிழகத்தில் ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசில், நினைத்தால் இயலாதது ஒன்றுமே இல்லை என்ற அளவிற்கு, இன்று திட்டங்களை தந்துகொண்டிருக்கின்ற இந்த காலக்கட்டத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவோடு மறுபரிசீலனை செய்து--டாப்கோ நிறுவனமானது நஷ்டத்தில் இயங்குகின்றது என்பது எனக்கு நன்றாகத் தெரியும், அதேசமயத்தில் நான் குற்றச்சாட்டாக சொல்லவில்லை. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள். நீங்கள் இவ்வளவு பேசிக்கொண்டே போனால் அவர் எந்தப் பகுதிக்குப் பதில் சொல்வது? (சிரிப்பு)

திருமதி ப. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் குற்றச்சாட்டாக சொல்லவில்லை. தயவுசெய்து மதுரை மாவட்டம் கப்பலூரில் உள்ளது போல் எனது தொகுதியை உள்ளடக்கிய பரமத்திவேலூர் வட்டத்தில் மீண்டும் மறுபரிசீலனை செய்து ஒரு ஹேச்சரீஸை உருவாக்குவதற்கு நிதிநிலையை சீர்ப்படுத்தி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறுவினால் இதே டாப்கோ நிறுவனமானது மிகவும் லாபகரமாக நாங்களே முன்நின்று அதை நடத்திக் கொடுப்போம் என்ற உத்தரவாதத்தை கொடுத்து அமைச்சர் அவர்கள் நிறுவுவார்களா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஒரு சிறந்த பேச்சாளர் என்பதை இங்கே நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். அவர் சொன்ன குற்றச்சாட்டுகள் எதுவாக இருந்தாலும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சில குறிப்புகளை தந்திருக்கிறார்கள். அது பற்றி அதிகாரிகளோடு கலந்து ஆலோசித்து, சாத்தியக்கூறுகள் இருக்குமேயானால் அந்தப் பகுதியில் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். அன்பழகன்.

திரு. எஸ். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் இதேக் கேள்வியை நான் கேட்ட நேரத்தில்

மாண்புமிகு அமைச்சரவர்கள் அலசி ஆராய்ந்து ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னார்கள். (சிரிப்பு) எனவே நாமக்கல் பகுதிக்கு அமைச்சரவர்கள் நேரில் ஒருமுறை வந்து, பார்வையிட்டு, அந்த கோழிப் பண்ணைகளை எல்லாம் பார்த்தால், நிச்சயம் அங்கே குஞ்சு பொரிப்பகம் தேவை என்ற எண்ணத்தை மனதிலே கொள்வார்கள் என்று எண்ணுகிறேன். பல மாண்புமிகு உறுப்பினர்கள் கால்நடைத் துறை அமைச்சர் அவர்களிடம் வாக்குறுதி பெற முடியாமல் தோல்வியுற்ற நேரத்தில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பனராகிய நானும், கபிலர்மலை சட்டமன்ற உறுப்பினர் ஆகிய திருமதி சரஸ்வதி அவர்களும் இதில் வெற்றி பெறுவோம் என்ற எண்ணத்தில் கேட்கிறேன். இப்போது 200 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பெங்களூரில் உள்ள தனியாரிடம் அதிக விலைக்கு வாங்க வேண்டும் அல்லது அரசு நிர்ணயித்த விலையில் வாங்க வேண்டுமென்றால் 200 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கப்பலூருக்குச் செல்ல வேண்டும். இந்த இரண்டு நிலையையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் மனதிலே கொண்டு, நாமக்கல் பகுதிக்கு வந்து, அலசி ஆராய்ந்து, குஞ்சு பொரிப்பகத்தை அங்கே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு, அதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரவர்கள் ரொம்ப அலச வேண்டாம். ஏனென்றால் இது முட்டை குஞ்சு பொரிப்பது. இதை ரொம்ப அலசினால் இரண்டும் கெட்டுப் போகும். (சிரிப்பு)

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களை நேற்று அலசினேன். (சிரிப்பு) இன்று ஆராய்ந்தேன். நாளை, மிக விரைவில், அதிகாரிகளோடு கலந்து ஆலோசித்து முடிவினை அறிவிப்பேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது முட்டை விஷயம். ரொம்ப அலசினால் முட்டை கெட்டுவிடும். அதனால் ரொம்ப அலசாதீர்கள். (சிரிப்பு)

வினா எண் 388, டாக்டர் எம்.பி. சேகர், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.